**O.S.No.5/2016**

பி.வா.சா.1 திருமதி.நாகவள்ளி

நாள் : 26.06.2025 நேரம் : 12.05 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவாச் சொத்தின் கிழக்கே எங்களுடைய சொத்தும், அதற்கும் கிழக்கே எங்கள் பெரியப்பா குருந்தர் சொத்தும், அதற்கும் கிழக்கே எங்கள் சித்தப்பா கார்மேகம் சொத்தும் அதற்கும் கிழக்கே எங்கள் சித்தப்பா பழனி சொத்தும் உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பா குருந்தர் சொத்தை தற்போது ராமர் அனுபவம் செய்து வருகிறார். தாவாச்சொத்தில் கிழக்கே உள்ள எங்கள் சொத்து குருந்தையா பெயரில் சர்வே எண் 215/1பி1ல் 34.5 ஏர்ஸ்ம், குருந்தர் சொத்து சர்வே எண் 215/1பி2ல் 6 ஏர்ஸ்ம், கார்மேகம் சொத்து சர்வே எண் 215/1பி3ல் 16 ஏர்ஸ்ம், பழனி சொத்து சர்வே எண் 215/1பி4ல் 18 ஏர்ஸ்ம் உள்ளது என்றால் எனக்கு விஸ்தீரணம், சர்வே எண் தெரியாது. மேற்படி சொத்துக்கள் எனது தகப்பனாருக்கும் அவரது உடன்பிறந்தவர்களுக்கும் எவ்வாறு பாத்தியம் என்றால் எனது தாத்தாவின் சொத்து எனது தாத்தாவிற்கு எப்படி பாத்தியம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவாச் சொத்திற்கு கிழக்கில் உள்ள எங்கள் தகப்பானார் பெயரில் உள்ள 34.5 ஏர்ஸ் எனது தகப்பனார் 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்றவகையில் கிடைத்தது. தாவாச் சொத்திற்கும் மேற்கில் சூசை உடையார் சொத்து உள்ளது என்றால் உடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள் உழுகிறார்கள். பெயர் எனக்கு தெரியாது. சூசை உடையார் மகன் தாவாச் சொத்திற்கு மேற்கே உள்ள இடத்தை உழுகிறார். அவர் பெயர் எனக்கு தெரியாது. தாவாச் சொத்தின் ஒரு பகுதியை எனது தகப்பனார் 2ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றார். கிரையம் பெறாத ஒரு பகுதி

கொஞ்சமாக மேற்குப்பக்கம் 2ம் பிரதிவாதிக்கு உள்ளது. அந்த மேற்குப்பக்கம் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியமானதாக நான் சொல்லும் சொத்துக்கு தனி வரப்புகள் இல்லை. நான்தான் அந்த மேற்குப்பக்க சொத்தையும் எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தோடு சேர்த்து ஒரே வயலாக அனுபவம் செய்துவருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் பாத்தியம் இருப்பதாக நான் எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் மேற்படி விபரத்தை ஏன் குறிப்பிடவில்லை என்றால் எனது தகப்பனாரின் கிரையப்பத்திரத்தில் தாவாச் சொத்தில் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் பெற்றது போக மீதி சொத்தில் பாத்தியம் இருப்பதாக தவறாக நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்குத்தான் தெரியும். எனக்கு திருமணமாகி 25 வருடங்கள் ஆகிவிட்டது. எனது கணவர் மட்டியரேந்தல் கிராமத்தை சேர்ந்தவர். எனது தகப்பனார் தாவாச்சொத்தை கிரையம் பெறும்போது எனக்கு திருமணமாகவில்லை என்று சொன்னால் சரிதான். சூசை உடையார் உழுகிற சொத்திற்கும் ஒட்டி கிழக்கே 90 செண்ட் நிலத்தை 1ம் வாதியின் தகப்பனார் குப்பு கோனார் 18.07.1967ல் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவாச் சொத்து கொன்னமுத்து பிள்ளை என்பவரிடம் குப்பு கோனார் கிரையம் வாங்கினாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. குப்புகோனாரின் மேற்படி கிரைய பத்திரத்தில் கிழக்கு மாலாக தங்கச்சாமியிடம் வீரபத்திரப்பிள்ளை கிரையம் பெற்றிருக்கிற புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தில் மேற்கு மாலாக கோ. சூசை ஊடையார் புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 18.07.1967ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் கொன்னமுத்து பிள்ளை 29.07.1963ல் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் வீரபத்திரபிள்ளை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் 2ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து ஏற்கனவே

வீரபத்திரபிள்ளை கிரையம் பெற்ற சொத்துதான் என்றாலும் மேற்படி கிரைய சொத்து தாவாச் சொத்திற்கும் கிழக்கில்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. தாவாச் சொத்திற்கும் கீழ்புறம் உள்ள எங்கள் சொத்திற்கும் கிழக்கில் உள்ள சொத்தை எனது தகப்பனாரும் அவர் உடன் பிறந்தவர்களும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். தாவாச் சொத்திற்கும் கீழ்புறம் உள்ள சொத்திற்கான கிரையப்பத்திரத்தை நாங்கள் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் உள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற 70 செண்டு இடம் சர்வே எண் 215/1பி1ன் மேற்கிலும் சர்வே எண் 215/1ஏ-ன் கிழக்கிலும் பகுதி பகுதியாக உள்ளது என்றாலும் பட்டா தவறுதலாக வாதிகளுக்கு பாத்தியமான தாவாச் சொத்தையும் சேர்த்து எனது தகப்பனார் மற்றும் 2ம் பிரதிவாதி பெயரில் தவறுதலாக கூட்டுப்பட்டாவாக ஏற்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை வைத்து வாதிகளுக்கு பாத்தியமான சொத்தையும் அபகரிப்பதற்காக பொய்யான விவரங்களை கூறி எதிர்வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்து எனது தகப்பனாருக்கு கிரைய பாத்தியமான சொத்து என்பதை உறுதி செய்ய எனது உடன்பிறந்த சகோதரர்களை சாட்சியாக விசாரிக்க நான் தயாராக இருக்கிறேனா என்றால் நான் அவர்களை அழைத்தேன். அவர்கள் வரவில்லை. தாவாச் சொத்து வாதிகளுக்கு பாத்தியமானது என்பதால்தான் எனது சகோதரர்கள் சாட்சியம் அளிக்க வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவர் கூறியதன் பேரில்தான் நான் இந்த வழக்கை எதிர்வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்திற்கு மேற்குப்பக்கம் உள்ள சொத்தின் சர்வே எண் 216/3ஏ1 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவாச்சொத்தை நான் அனுபவம் செய்யவில்லை என்பதால்தான் தாவாச்சொத்தை ஒட்டி மேற்கில் அனுபவம் செய்யும் நபர்களின் பெயர் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டா எனது

தகப்பனார், 2ம் பிரதிவாதி பெயரில் இருந்தாலும் கிரைய காலம் முதல் தாவாச் சொத்தை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்:12.35 P.M

சாட்சியின் கையொப்பம்.